# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI.

CC–165/2022

Prosecution witness – PW 1

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு.தெய்வேந்திரன் | Caste: | |
| Father's Name | : | Calling: | |
| Village | : | Religion: | |
| Taluk | : | Age: | |

(A1 present. A2 absent. petition u/s.317 Cr.P.C filed and allowed.)

19.05.2026 – 03.30 PM

முதல் விசாரணை:–

1. நான் கீழக்கிடாரம் கிராமத்தில் குடியிருந்து கூலிவேலை செய்து வருகிறேன். எனக்கு வழக்கின் எதிரிகளை தெரியும். அவர்கள் உள்ளூர்காரர்கள் தான். எனக்கும் எதிரிகளுக்கும் இடையே ஏற்கனவே இடப்பிரச்சனை இருந்து வந்தது. இந்நிலையில் 2017ம் வருடம் ஒரு மாதம் 2ம் தேதி மதியம் 01.00 மணியளவில் ஊரில் எனக்கு சொந்தமாக உள்ள வயலை சர்வேயரை வைத்து அளந்து கொண்டிருந்தேன். அப்போது எதிரிகள் இருவரும் அங்கு வந்து வயலை அளக்கக்கூடாது என்று கூறி எங்களை அளக்க விடாமல் தடுத்து விட்டார்கள். அதனால் போலீசாருக்கு தகவல் அளித்து போலீசார் அந்த இடத்திற்கு வந்து இரு தரப்பினரையும் நிலையம் அழைத்து சென்று சமாதானப்படுத்தி அனுப்பி வைத்து விட்டார்கள்.

2. நான் அன்றைய தினம் மாலை 06.30 மணியளவில் எனது வீட்டிலிருந்த போது எதிரிகள் இருவரும் எனது வீட்டிற்கு வந்து என்னை வெளியே அழைத்து எவ்வாறு நிலையத்திற்கு செல்லலாம் என்று கூறி அவர்கள் வைத்திருந்த கம்பால் எனது உடல் முழுவதும் மாறி மாறி அடித்ததில் எனக்கு ஊமைக்காயம் ஏற்பட்டது. பிறகு எதிரிகள் இருவரும் அங்கிருந்து சென்று விட்டார்கள். பின்னர் அக்கம் பக்கத்தில் இருந்த பெருமாள் மற்றும் சுந்தர்ராஜ் ஆகியோர் என்னை ஆட்டோவில் ஏற்றி இராமநாதபுரம் அரசு

மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்துச்சென்றார்கள். அங்கு நான் ஒரு வார காலம் தங்கி சிகிச்சை பெற்றேன். நான் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த போது வாலிநோக்கம் காவல் நிலையத்தில் இருந்து போலீசார் வந்து விசாரித்தார்கள். நான் நடந்ததை கூறினேன். அதை அவர்கள் எழுதிக்கொண்டார்கள். நான் கையோப்பம் செய்து கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த புகார் மனு நான் கொடுத்தது தான். அது அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் விசாரித்தனர்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை: –</u>**

1. நான் முதல் விசாரணை சாட்சியத்தில் கூறிய சங்கதிகளை தான் போலீசார் விசாரணையிலும் கூறினேன் என்றால் சரிதான். என்னை ஆட்டோவில் பெருமாள் மற்றும் சுந்தர்ராஜ் இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றதாக போலீசார் விசாரணையில் கூறினேனா என்றால் ஆமாம். புகார் மனுவை நான் சொல்ல சொல்ல போலீசார் எழுதிக்கொண்டார்கள். நானும், எதிரிகளும் இடப்பிரச்சனை இருந்ததால் அந்த முன்விரோதத்தில் நாங்கள் பேசிக்கொள்ள மாட்டோம் என்றால் சரிதான். சம்பவம் சமயத்தில் நான் சுயநினைவோடு தான் இருந்தேன். சம்பவ இடத்திலிருந்து 1 1/2 கி.மீ தொலைவில் உள்ள மேலக்கிடாரத்தில் ஒரு அரசு மருத்துவமனை உள்ளது என்றால் சரிதான். மேலும் சம்பவ இடத்திலிருந்து 6 கி.மீ தொலைவில் உள்ள வாலிநோக்கத்திலும், 8 கி.மீ தொலைவிலுள்ள சிக்கலிலும் அரசு மருத்துவமனை உள்ளது என்றால் சரிதான்.

2. பெருமாள் மற்றும் சுந்தர்ராஜ் ஆகியோர்கள் எனக்கு உறவினர்கள் என்றால் சரியல்ல. அக்கம் பக்கத்தில் வசிப்பவர்கள். எனக்கு வெளிப்படையாக காயங்கள் எதுவும் இல்லை என்றால் சரிதான். நான் கூறியபடி கூறிய விதத்தில் கூறிய தேதியில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், எதிரிகளுக்கம் எனக்கும் இடையே இருந்த முன்விரோதத்தை பயன்படுத்தி எதிரிகளை பழிவாங்கும் நோக்கில் பொய்யாக

புகார் மனுவை அளித்துள்ளேன் என்றாலும், எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றாலும் சரியல்ல.

ஓம்/G.தங்ககார்த்திகா
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர் (மு.கூ.பொ)
கடலாடி